

# வாதம்

921
வாரத
L|PR



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், புத்தூரை இருப்பிடமாகவும், கொண்ட விஸ்வகுல விழுதும், புத்தூர் காளிகாம்பிகை தேவஸ்தான பரம்பரைத் தர்மகர்த்தாவும், தேவ ஊர்திகள் பலசமைத்த மயன் மரபுத் தோன்றலுமான

**விஸ்வப் பிரம்மஸ்ரீ**

**அமரர்**

# கந்தையா வரதலிங்கம்

**அவர்கள்**

**'காலம்' ஆகிய நினைவுக்குத் தந்தோம்**

# 'வரதம்'



காளி!
ஊழிக்கூத்தின் முதல்வி!
வந்தாய் எம்வாசலில் நேற்று.
திரும்பும் போது
'அப்பு'வைத் திருடிச் சென்றாயடி.
சிம்மவாகினி!
உன்பாத அரவிந்த நிழலில்
'அப்பு'க்கோர் ஆசனம் அருள்க.
இனியாயினும் அவர் கொஞ்சம்
இளைப்பாறட்டும்.



விஸ்வப் பிரம்மஸ்ரீ

அமரர்

# கந்தையா வரதலிங்கம்

(00.00.1916 - 8.01.2004)

அவர்களின் மறைவையொட்டிய இரங்கல்

ஆக்கம்: செ.சட்டநாதர் அவர்கள் (02.02.2004)

இறந்தநாள் வெண்பா

இரும்பினது உரம்மிஞ்சு விஸ்வகுல வரதரவர்
மருவியயிப் பூவுலகை மறக்கத்தன் - அருமுடலை
விடுத்ததிதி சுபானுதை மாதத்தின் தேய்பிறையை
அடுத்துவரு துவாதசியென அறி.

படையல்

மண்விட்டு விண்ணுற்ற மன்னவவுன் தண்ணொளிசேர்
வண்ணமலர்ப் பொன்னடியில் வெண்மலரை வைப்போமேல்
பண்ணினிய புண்ணியனே! வாடுமென எண்ணுவதால்
கண்நனைய எம்நெஞ்சைக் காணிக்கை யாக்குகிறோம்.

ஆதங்க வெளிப்பாடு:

வானில் நிமிர்ந் தெழுந்து
வற்றாத ஒளி பரப்பிக்
கானைக் களனி களைக்
கலகலக்கச் செய்து நிற்கும்
பானுதன் செயல் போன்றே
பிள்ளைகள் நாம் சிறக்க
ஊனை யுருக்கி யுந்தன்
உதிரத்தா லெமை வளர்த்த
தேனே செழுஞ் சுவையே
தெவிட்டாத மாங் கனியே
ஏனோ எமை யீங்கு
ஏங்க வைத்து நீமறைந்தாய்!



போன வழி யதனை
மீழும் வகை யறியா
சேனை மலைப்பது போல்
ஆவி மிகச் சோர்ந்து
நாமும் திகைத் தீங்கு
நாடும் சுற்றத் தொடு
கூடிக் குளறு தலும்
உன் செவிக்குக் கேட்கலையோ?

இத்தரை மீது நீவந்த பான்மையும்
அத்தரை தன்னை நீத்திட்ட சேதியும்
வித்தகா! அத்துடன் நின்றிட்டாற் போதுமா?
சித்திர மார்பும் சிரித்திடு முகமும்
கைத்திறன் மிக்கச் சிற்பக் கலையும்
கத்திடும் குரலில் கனிவுஞ் சிந்தும்
பத்தரை மாற்றுத் தங்கமே யீங்கு
சத்திய மாகச் சொல்லுதல் முறையே.

விதை தந்த விருட்சங்கள்:

இந்துமா கடலின் முத்தாய்
இலங்கிடு மீழ நாட்டில்
சுந்தர வடிவு கொண்டு
சுதந்திர தாகம் மிக்குச்
செந்தமிழ் வீரம் நன்கு
செறிந்திடு யாழின் மண்ணில்
சொந்தமாய் கலைகள் செய்து
சரித்திரம் பலவும் கண்ட
சீரிய திருநெல் வேலி
செய்த நற்றவ த்தின்
பேரிலே வந்து உதித்த
பெருங்குண வன்னப் பிள்ளை
காரிகை இவளைக் கண்டு
கடிமணம் செய்ய வுற்றான்

மாரியின் வளத்தா லென்றும்
பசுந்தரை செழித் திலங்கும்
பாரிய செல்வர் வாழும்
புதுவையாம் கிராமந் தன்னில்
ஏரினை நன்கு வடித்தே
உழவற்கு நலங்கள் கூட்டும்
ஆரியன் கந்தை யாவும்
அணைத்திடு தினம் முதலாய்
சூரிய ஒளியது போன்றே
சுடருற்று வாழ்ந்திடு நாளில்............

துளிர்த்தல்:

மனையறப் பூங்கா போந்து
மகிழ்வொடு வாழ்ந்த தாங்கு
வினையது நலங்கள் சேர
விரும்பியே இவர்கள் கூட
சுனையது அழகு மிளிர
மலரது பூப்ப் தொப்ப
மனையதில் மாண்பு தங்க
மகனதாய்த் துளிர்த்தான் இவனும்.

செழித்தல்:

திருமக னாகவே யுதித்த
வரத லிங்கமா மிவனைப்
பெருமைசேர் அருமை பேணிப்
பெற்றவர் நன்கு வளர்க்க
கருவினிற் திருவுடை யிவனும்
கவின்தரு தொழில்மிகு கற்றே
மருவிடு விருவூர் தனிலும்
மாதொழில் மன்னனாய் வாழ்ந்தான்.



இணைதல்:

பாவை நல்லவள் பாக்கிய மென்றனர்
பஞ்சின் மென்மைபோ லுள்ளம் என்றனர்
காவை ஒத்திடும் முகவொளி யென்றனர்
காரிகை கண்கள் குவளைக ளென்றனர்
சேவை செய்வதே நோக்கங்க ளென்றனர்
தேக்கிய யிவையெலாம் நெஞ்சினை அழுத்தவே
தூயவள் இவளது தளிர்க்கரம் பற்றியே
சோபிதம் இலங்கிட வாழ்க்கையில் இணைந்தனர்.

கனிகள் சொரிதல்:

மணமது பூண்ட இவர்கள்
மனதில் அன்பு தூண்ட
உணர்வது ஒன்றித் திணைந்தே
உயரிய காதல் வசத்தால்
மணமகள் கருவுற் றீங்கே
மாசிலா ராஜ லட்சுமி
வணங்கிய காளி யருளால்
வணப்புடன் வந்து உதித்தாள்.

“நாடி நரம் பதுகள்
நர்த்தித்து வீறு கொளத்
தேடித் தமிழ் இருந்த
திருக்கோ விலவன் நெஞ்சம்”
பாடும் கவிஞ ரெலாம்
இவ்வாறு புகழ் சேர்க்கும்
தேடற் கரிய கவி
புதுவை யுமவ தரித்தான்.

மாலைச் செவ்வானம்
வையந் தழுவிநிற்க
சோலைப் பசுங்கிளிகள்
சொகுசான யிசைசொல்ல
வாலைப் பருவத்துப்
பாக்கியமா முன்மனைவி
கோலச் சரோஜினிக்
கோகிலத்தைப் பெற்றனளே.

மண்ணிலே மாண்புற் றோங்கி
மகிழ்வொடு வாழ்ந்த காலை
வெண்ணிலா முகத்து அன்னாள்
இனியதொரு கருவுங் கொண்டே
தண்ணொளி வதனம் கொண்ட
தர்ம குலசிங்க மென்னும்
எண்ணரு மிளவற் பிறப்பால்
எய்தினீ ருவகை யையா.

நறுமணம் கமழும் பூங்கா

இல்லறப் பூங்கா புகுந்தே
இனிதுடன் வாழ்ந்த இவர்கள்
இல்லஞ் சேர்பவற் கென்றும்
இதமுறப் பலபணி புரிந்து
'நல்லதோர் குடும்பம்' என்றே
நாட்டினர் மெச்சிடு வகையில்
நல்லற வாழ்விற் கிவரோர்
நாயக மாகத் திகழ்ந்தார்.



கொடிகளுக்குக் கொழுகொம்பு

கண்ணினைக் காக்கும் இமையதுபோல்
என்றுமே குடும்பத்தைக் காத்துநின்ற
புண்ணியா! உந்தன் அரவணைப்பால்
பிள்ளைகள் வளர்ந்திட்ட போதினிலே
மண்ணில் உன்குலம் பெருக்கவெண்ணி
மாசிலா தோர்களைத் தேர்ந்தெடுத்துப்
பண்ணரும் மணங்களைச் செய்துவைத்தே
பாரினில் மகிழ்வொடு நீரிருந்தீர்.

கனிகளின் விதைகள்

திருமணம் பூண்ட மக்களெல்லாம்
தித்திக்கும் பிள்ளைகள் பெற்றமையால்
பெருமகிழ் வெய்திய நீரென்றும்
பேரமார் பேர்த்தியர் புடைசூழ
பாரினில் பாங்குடன் அவர்வாழப்
புத்திகள் பலபடச் சொன்னமையால்
யாவரும் போற்றும் வண்ணமதாய்
வையந் தன்னில் வாழ்கின்றார்.

காளிக்கும் நிழலானாய்:

கொற்றத் தவளா முயர்காளி
கொலுவுற் றிருந்த சிறுகோவில்
முற்றும் வெளவால் ஆந்தையொடு
மூசும் பாம்பும் தங்காது

பற்றைக ளனைத்தும் நீயகற்றி
பக்குவப் படுத்தி வந்ததொடு
உற்ற தொண்டுகள் செய்தமையால்
உயர்நிலை பெற்றுத் திகழ்கிறதே.

கங்குல் நிறத்துக் காளியவள்
குளிர்த்தி வேள்வி காண்பதற்குப்
பங்குனி மாதம் வந்திட்டால்
பகலும் இரவும் பார்க்காது
எங்கும் அலைந்தே அதற்குரிய
ஏற்றம் பலவும் தேடிநின்றே
பொங்கிப் படைக்கும் காட்சியெலாம்
படமாய் நெஞ்சில் உலவுதையா.

'வருவீர் வருவீர் எல்லோரும்
வருவீர்' என்றே குரல்கொடுத்து
அருவி சேரும் வெள்ளமது
அனைய அன்பை நீசொரிந்து
மருவும் அடியார் மனம்மகிழ
மாவிளக் குஞ்சோறும் நீகொடுத்து
அருளைப் பாய்ச்சும் வகையெல்லாம்.
அடியோம் மனத்தை உலுக்குதையா.

விருட்சத்தின் சுகந்தம்:

புலர்ந்து விடியும் பொழுதினிலே
புத்தூர் விட்டுப் புறப்பட்டு
உலர்ந்து இறுகிய உன்தேகம்
இளைத்துக் களைக்க முதுமையிலும்
சிலைபோல் பார்ப்போர் அதிசயிக்க
சயிக்கிலி லென்றும் பிறப்பிடமாம்
கலைமிகு திருநெல் வேலியுற்றுக்
காலடி வைத்துமே பூரிப்பீர்.



தேர்வேந்தன் உன்தம்பி கந்தசாமி
செய்கின்ற தொழிற்கென்றும் அச்சுமாகி
பேரார்ந்த அவன்கலைக்கு மெருகுமூட்டிப்
பொன்றாத 'கலைச்சிகரம்' அவன்தானென்றே
பார்போற்றும் அவன்புகழின் ஏணியானாய்
பகலிரவாய் அவனுயரத் தோள்கொடுத்தாய்
ஆராத இவ்வன்புச் சாட்சியதாய்
அவன்சிரசில் கொள்ளிவைத்துக் கடனும்செய்தாய்.

இரும்பது உருக்கி வார்த்த
உருக்குமே உனக்கு அஞ்சும்
கரந்தனில் உளியை ஏந்திக்
கலைகளைப் படைக்கும் போது
மரங்களும் பணிந்து உந்தன்
மனதினிற் கேற்ற வாறு
உருவங்கள் போர்க்கும் காட்சி
உன்னவே நெஞ்சிற் குத்தும்.

கொழுகொம்பின் அரவணைப்பு:

அயலது விலகா மனைவி
முதுமை தழுவிய போதும்
உயரிய உணவு தளித்து
ஊட்டமாய்ப் பேணி நிற்க
வயதது முதிர்ந்த போதும்
உரமது குறையா திருந்தாய்
தயவது அற்ற விதியால்
தஞ்சமே ஆனாய் நோய்க்கு
காயமே சோர்வுற்று நீங்கு
சொல்லொணாத் துயரத் தாலே

பாயதில் நீபடும் பாட்டைப்
பார்த்துமே உனது துணைவி
தாயவள் போன்றே செய்த்
தொண்டதன் சுமையை எடுத்து
வாயதாற் சொல்ல எமக்கு
வார்த்தைகள் உண்டோ? அந்தோ!

சருகாதல்:

பதுமை போன்ற உனது உடலம்
முதுமை வரைக்கும் காத்த போதும்
நோயது தந்த வேதனை யாலே
காயாய்க் கனியாய்ச் சருகாய் மாறி
அகவை ஈங்கு எண்பத் தெட்டில்
செகமதை விட்டுப் பிணமதாய் மாற
கைப்பிடி நாயகி கதறித் துடித்து
இப்புவி தன்னில் ஏங்கியே வீழ
பெற்றிடு மக்களும் பெறா மக்களும்
பற்று மிகுதியால் பதைத்துப் புலம்ப
மற்றும் மருகர் மருகியர் விம்மி
முற்றம் முழுதும் கண்ணீர் சிந்த
துன்பம் பெருகியே சோதரர் தவிக்க
அன்பு மைத்துன, மைத்துனி மார்கள்
ஒன்றாய்க் கூடி உளமது சோரப்
பன்னுதற் குரிய அன்பர்கள் கலங்கக்
காரது பொழியும் பெருமழை போலப்
பேரர் பேர்த்தியர் பேதலித் தழவே
சிந்தை யுறைந்திடு பூட்டர் பூட்டியர்
கொந்தளிப் புடனே கோவென்று குளறிட
சீலம் நிறைந்த வரதப்பு உன்னுயிர்
ஞாலம் விடுத்து நற்கதி பெற்றதே!



## குமுறுகின்ற எரிமலைகள்

மனைவி - வரதலிங்கம் பாக்கியம்

அந்நாளில் மணவினையில் கெட்டிமேளம் கொட்டிநிற்க
அந்தணரும் அவையோரும் அக்கினியும் சாட்சிசொல
பொன்னால்செய் மங்கலநாண் நின்கையால் என்கழுத்தில்
பிரியமுடன் கட்டியெனை உரிமைகொண்ட போதினிலே
எந்நாளும் உனைப்பிரியேன் என்றுரைத்து உறுதியுடன்
என்கைமேல் கையடித்து நீசெய்த சத்தியத்தை
இந்நாளில் மறந்தேக என்னகுற்றம் செய்தேனோ?
எண்ணிடவே ஏழைநெஞ்சம் ஏங்கியிங்கு துடிக்குதையோ!

குங்குமம் இடாமல் குளிர்மஞ்சள் பூசாமல்
மங்கலநாண் அணியாமல் மணமலர்கள் சூடாமல்
தங்கநிறக் கூறையினைத் தரியாமற் தாரணியில்
பங்கமிவை புரிந்தாய் பாவிநான் என்செய்வேன்.

## காண்பதெப்போ

மூத்த மகள் - இராஜலட்சுமி பத்மநாதன்

பொன்னும் மணியுமெனைப் பூணவைத்தாய் - மிகு
பொலிவுடனே என்றுமெனை வாழவைத்தாய்
கண்ணுன் மணியெனவே காத்துவந்தாய் - இன்று
காலன் குறுகமறைந் தோடிவிட்டாய்
விண்ணும் புவியுமெனைப் புகழவைத்தாய் - ஆனால்
வீதியில் தவிக்கவிட்டு ஏன்மறைந்தாய்
மண்ணும் அதிர்ந்திடவே கலங்குகிறேன் - அந்தோ!
மேதினியில் இனியுனைக் காண்பதெப்போ?

## உன் பிரிவை தாங்குவேனோ?

மூத்தமகன் - வரதலிங்கம் இரத்தினதுரை

கார்போன்று அருள்பொழியும் தந்தையாரே! எந்தன்
 கனியவுளத் தினிதிருப்பாய்; என்றும் நீயே
மார்பதனால் எனையணைக்கும் தந்தையாரே! உந்தன்
 மனவுறுதித் திறனறிவேன்; நன்கு நானே,
ஆரமுதின் சுவையன்ன தந்தையாரே! என்னை
 அழகுதமிழ் பயிலச்செய்தாய்; அன்று நீயே,
தேருமுயர் நெறியெல்லாம் தந்தையாரே! எனக்குத்
 தித்திக்கத் தந்திருந்தாய்; என்றும் நீயே,
சீரார்ந்த உன்மிடுக்கைத் தந்தையாரே! இங்கு
 தினமும்யான் பார்ப்பதற்கு; எங்கு செல்வேன்,
பேரார்ந்த தமிழ்செய்ய தந்தையாரே! நல்ல
 பேறுதந்த உன்பிரிவைத் தாங்குவேனோ?

வாரிய கையைக் கட்டி
 வாயினி லரிசி யிட்டுப்
பாரிய பறை முழங்கப்
 பாடையி லுன்னை வைத்து
ஊரிலே யுள்ளோ ரெல்லாம்
 உருகியே சுடலை சேரச்
சீரிய சிரசிற் கொள்ளி
 மூட்டினேன் நானு மந்தோ!

## அப்புவென யாரையினி நானழைப்பேன்

இளையமகள் - குமாரலிங்கம் சரோஜினிதேவி

உன்னைப் பிரிந்து நான்
 தூர தேசம் சென்றமையால்
என்னை விடுத்து நீ
 எம வுலகு உற்றசெயல்
துன்பம் மிகக் கொடுத்து
 மெழுகு போல் உருக்குதையோ!



அன்பினிய அப்பு என
 யாரை யினி நானழைப்பேன்.

## கண்டிடாப் பாவியானேன்

இளையமகன் - வரதலிங்கம் தர்மகுலசிங்கம்

அருகிலே எனை யிருத்தி
 அன்பொடு வளர்த்த தெல்லாம்
உருகியென் மனத்தை வாட்டி
 உருக்குலைக் கின்ற தையோ!
பெருகிடும் வாழ் வெல்லாம்
 பெறுதற்கு வித்தே! உந்தன்
கருகிய சடலந் தானும்
 கண்டிடாப் பாவி யானேன்.

## வெந்தனவே எம்நெஞ்சம்

மருமக்கள் - கா.செ.பத்மநாதன், ஸ்ரீரஞ்சினி இரத்தினதுரை,
 சொ.குமாரலிங்கம், வசந்தகுமாரி தர்மகுலசிங்கம்

பொட்டார்ந்த நெற்றியும் புன்சிரிப்பும் புனிதநீறும்
இட்டார்ந்த மேனியும் இங்கிதமான மென்சொல்லும்
கட்டார்ந்த வுடலமும் கருமைமிகு உன்முகமும்
விட்டேக எம்மாமா வெந்தனவே எம்நெஞ்சம்

## பேதலித்து ஏங்குகிறோம் இங்குநாமே

பேரப்பிள்ளைகள் - ப.சுரேசன், ப.சுரேந்திரன்,
 ப.சுதாகரன், ப.சுதாஜினி, ப.சுபாசினி, ப.சசீலா,
 இ.மாலிகா, இ.சோபிதன், இ.ஜீவிதன், த.தர்மினி,
 கு.நிவேதன், சி.பார்த்திபன், சி.சிவதாஸ்,
 சு.கமலாம்பாள், சு.தயாளினி, சு.புஸ்பலதா

பச்சமுடன் பாற்பொங்கல் பணியாரம் பாங்குடனே
 பருப்பினொடு மாங்கனியும் சேர்த்து

கச்சிதமாய் உணவூட்டி உன்தோளி லெமையிருத்தி
கண்தூங்க எத்தனையோ கதைசொல்வாய்
சச்சைநாம் செய்கையிலே தாயடிக்கத் தாங்கொணாது
ஓடிவந்து தடிபறித்து முத்தமிடுவாய்
இச்சகத்தில் இனியெமக்கு உற்றதுணை எவருமின்றி
பேதலித்து ஏங்குகிறோ மிங்குநாமே.

தேடாவகை ஏனோ:

பூட்டப்பிள்ளைகள் - நஜனி, கஜனி,
வர்சிகா, யாதவன், ரம்மியன்,

பூவும் கொடுத்துப் பட்
டாடை கொடுத்து மிகு
மேவுங் கருணை யுடன்
தோளி லிருத்தி நனி
காவித் திரியு முனை
காணத் துடிக்கு மெமை
தாவித் தழுவ மனம்
தேடா வகை ஏனோ?

கலங்குதே பிரிவால் நெஞ்சம்:

பெறாமக்கள்: ச.விமலசோதி, க.விமலராணி,
க.விமலரட்ணம், ஸ்ரீ.விமலரஞ்சினி,

பெற்றவுன் புதல்வர் போலப்
பிரியமாய் எமை அணைத்து
உற்றநன் மதிகள் கூறி
உண்மையின் வழியைக் காட்டிப்
பற்றுடன் வாரி ஏந்திப்
பாசமாய் வளர்த் தெடுத்த்



கற்பக தருவே அந்தோ!
கலங்குதே பிரிவால் நெஞ்சம்.

கதிகலங்க வைத்தானே காலன்:

சகோதரர்கள்

மதியிழந்தோம் தோளின் வலுவிழந்தோம் மண்ணிலிரு
நிதியிழந்தோம் நெஞ்சத்து நிறைவிழந்தோம் - விதியிதுவோ
சதிவிழைத்துச் சோதராவுன் னுயிர்குடித் தெம்மைக்
கதிகலங்க வைத்தானே காலன்.

கண்ணீரை வழிந்தோட வைத்தாய்:

மைத்துன மைத்துனிமார்

உத்தமனே! அன்பு உளத்தவனே! உற்றதுணை
மைத்துனனே! நல்ல மனத்தவனே! - வித்தகனே!
விழித்தவிழி மூடி விழுதுபோல் கண்ணீரை
வழிந்தோட வைத்தா யெமக்கு.

குமுறுகிறோம் அந்தோ அந்தோ!

திருநெல்வேலி

கலைமலிந்த திருநெல்வேலி கலங்கியேங்க
காசினியோர் தாங்காது கண்ணீர்சிந்த
விலைமதிக்க வொண்ணாத நீயுமெம்மை
விட்டகன்று சென்றதுயர் விலக்கலாமோ?
அலைகடலில் பட்டலையுங் கலங்கள்போல
ஆறுதற்கு வகையறியோம் நாமுமிங்கு
சிலையுருவாய் எமைவிட்டு ஏகியதால்
சிதைந்துமனம் குமுறுகிறோம் அந்தோ அந்தோ!

அழுகுதே புத்தூர் முற்றம்:

எத்தனை மக்கள் கூட்டம்
ஏங்கியே உந்தன் பிரிவால்
கத்திடும் கடலும் தோற்கக்
கரைந்துமே கண்ணீர் மல்கி
"உத்தமத் துரையே எங்கள்
உயிர்க் கினியான்" என்றே
அத்தனை பேரும் சொன்னார்
அழுகுதே புத்தூர் முற்றம்.

உறவுகொள்ள வாராயோ:

அன்பர்கள்

எப்படித் தழலிலுன்றன் எழில்மேனி எரிந்ததையோ
அப்படி உனையெரிக்க அழலுக்குங் கடினநெஞ்சோ
செப்பரும் உன்பிரிவை எப்படிநாம் சகித்திருப்போம்.
தப்பியே மீண்டுவந்து உறவுகொள்ள வாராயோ?

தேற்றம்

ஆறுதல் கொள்வீர் அனைவருமே

எழுதிய காலம் வந்திட்டால்
எம்முயிர் ஒருகணந் தங்கிடுமோ?
தொழுது கெஞ்சிப் பணிந்தாலும்
துணிந்து போர்மிகு செய்தாலும்
வழுகிய வுயிரெம் உடலகத்தே
வந்து சேர்தல் சாத்தியமோ?
அழுத கண்ணீரைத் துடைத்துநின்று
ஆறுத்ல் கொள்வீர் அனைவருமே.

□□





# 'மனிதம்' குடியிருந்த 'வரதம்'

- ஆசை இராசையா

நரம்பும் என்பும் கூடியபங்கு வகிக்கும் தோற்றம்
ஆயினும், ஓவியனைக்
காரியம் தூக்க வைக்கும் கட்டமைப்பு.
கலைக் கண்ணின் பார்வைக்கோர் கலைப்படைப்பு,
கடவுளின் அற்புதச் சிருஷ்டிகளில் ஒன்று.

'கலைச்சிம்மம்' கந்தசாமியின் பட்டடையில்
எங்கோ ஒரு மூலையில்
உளியும், தட்டுப்பொல்லும் தாளமிட
எண்பது வயதுக்கு மேலும்
இயங்கிக் கொண்டிருந்த அற்புதம்.

கண்ட என் மனத்தில் ஒரு நெருடல்.

காசு கொடுத்தாலும் சிரிப்பறியாத -
உணர்ச்சியை வெளியிற் காட்டாத
இறுகிய முகம்.
நெருங்கிச் செல்லத் தயக்கம், ஆயினும்
நாட்செல்ல நாட்செல்ல

கல்லுக்குள் ஈரம் இருப்பதை உணர முடிந்தது.
தேங்காயும் இளநீரும் சுவைக்க முடிந்தது.
அதன் பின்
தேங்காய் ஓடு எனக்கு ஒரு பொருட்டாகவில்லை.

போட்டி,
பொறாமை,
வஞ்சம்,
அடுத்தவன் காலுக்குக் குழிபறித்தல்,
கயமைத் தனம்,
காட்டிக் கொடுத்தல்
இவை அவனறியாதவை.

பேச்சில் தூஷணை, ஆயினும்
போலியில்லை;
வெளிவேசமில்லை;
பட்டதைப் பட்டபடியே சொல்லும்
பாமரத்தனம்.

அதனாற்தானோ!

யார்க்கும் அஞ்சாத நிமிர்வும்
மிடுக்கும் இவனுள் குடிகொண்டதோ?
சுருக்கமாகச் சொல்லின்
'வள்ளலார்' காண விளைந்த மனிதன் இவன்.
எந்தச் சர்வகலாசாலையிலும்
கிடைக்காத பாடப்புத்தகம்.
இனியாயினும் மனிதனாக நாம் மாறுவோமா?
இவனை
நாம் படிப்பதற்காகவே அனுப்பி வைத்த இறைவா
உனக்கு நன்றி.

□□





# 'அப்பு' என்ற சொல்லில் ஆனந்தம் கண்டோம்

கருணாகரன்

அப்புவைக் கண்டேன்
எங்களின் ஐயாவைப் போல
யாரும் மறக்க முடியா அப்புவை.
ஓர்மமாய்,
இயல்பாய் விளைந்த எளிமையாய்
நெஞ்சிலிருந்து பொங்கிவரும் வாஞ்சையாளராய்
எதற்கும் எவருக்கும் அஞ்சாதவராய்
யாரிடமும் எப்போதும் எதையும்
எதிர்பார்த்திருக்காத அப்புவைக் கண்டேன்;
என்வாழ்வின் பேறாய்.

'அப்பு' ஓர் அபூர்வ உலகம்
'கிறுக்கும்' கனிவும் உண்மையும் நேர்மையும்
நிமிர்வும் கொண்ட அன்பாளர்; ஓயாத உழைப்பாளர்.
சலியாத முகம், சோராத மனத்தோடு
வலிய கைகளால் உறுதியாய்ப் பிடித்து
"பெடியா" என்பார்.
"எப்படி இருக்கிறாய்?
வா, இரு, குடி, சாப்பிடு, போ"
என்று எல்லாப் பேச்சும் ஒருமையிலிருக்கக் கதைப்பார்.
மெத்தச் சத்தமாய் வரும் குரல்
நறுக்கன விழும் வார்த்தைகள்
கட்டளையாய் ஒலிக்கும் அரவணைப்பு
அப்புவின் மொழி உரிமையாயிருக்கும்
தன்னுழைப்பில், தன்நிமிர்வில், தன் வாழ்வை
நாம் வியக்க நின்றவர்; நெஞ்சுரம் திரண்டவர்

அன்பின் ஈரம் உள்ளிருக்கும்: அதைக் காட்டார்.
வெளியே பற்றென்ன, பாசமென்ன என்பதுபோற் திரிவார்.
பிள்ளை என்றும் தம்பியென்றும்
பெடியா என்றும் அவரழைக்கையில்
அவரே அறியாமற் தெரியும்
அவருள்ளத்தினுள்ளே பொங்கித்திரண்ட அன்பின் ஊற்று.

பஞ்சி அலுப்பென்று
அப்பு இருந்த நாளை நான் கண்டதில்லை
எதையேனும் செய்வார்; எங்கேனும் போவார்
'இந்த வயதில் ஏனப்பு இந்த வேலையெல்லாம்' என்றால்
'சும்மாயிரு, நான் சும்மாயிரன்' என்றுவிட்டு இயங்குவார்
எண்பது வயதிலும் இருபது முப்பது மைல்கள்
சைக்கிளோடி வரும் அப்புவை யார் தடுக்கவில்லை.
யார் தான் வியக்கவில்லை.

ஒரு போது நாங்களும் அப்புவோடிருக்கக் கிடைத்தது.
நாங்கள் பேறுற்றோம்; பெரும் பேறுற்றோம்.
அகதியென்று அலைவுற்றபோதும்
அந்நாட்கள் இனியனதான்
அன்றெல்லாம் 'பிள்ளை' என்று என் மனைவியை
அவர் பிள்ளையாக்க எமக்குக் கிடைத்தது.
'பெடியா' என்றென் மகனை அவரழைக்க எமக்கு வாய்த்தது.
'அப்பு' என்றொரு சொந்தம் என்றும் எமக்கானது.
ஆச்சியை அவரழைத்து
'தேத்தண்ணி குடு' என்று சொல்வார்.
நாங்கள் தேனீரா பருகினோம்?
அப்புவின் வாழ்விலிருந்த அழகிய முகத்தை
அப்புவின் மனசிலிருந்த அன்பின் கனிவை
அப்புவின் திறனில் முளைத்த கலையின் வியப்பை
அப்புவின் நெஞ்சிலிருந்த வீறாப்பின்
உயர்வையல்லவா பருகினோம்.

ஏழு வருசங்களின் பிறகு
நாங்கள் மீட்டெடுத்த நாட்களில்
மீண்டும் அப்புவையும் ஆச்சியையும் காண ஓடிவந்தேன்.

'அப்பு' எங்கள் அப்பு
ஒரு நாளும் சோராதிருந்த அப்பு,



அப்போதும் இருந்தார் அப்படியேதான்.
மனம் துருதுருக்க
என் கைகளைப் பிடித்தருகில் தன்னுடன் வைத்தபடி
'ஆரது' என்றார்
ஆச்சி இன்னாரென்று என்னைச் சொல்ல
என் முகந்தடவினார்.
அந்தக் கைகளில் என்ன இருந்தது.
என் இதயத்தை அப்படிக் கரைத்துவிட?
அந்த அணைப்பில் என்ன ரகசியமிருந்தது.
என் நினைவுகளில் ஆழப்பதிய?

அப்பு, எங்கள் அப்பு
மொழி கரைந்து அழுகையாய்ப் பீறிடுகிறது
இனிச் சொல் இல்லை அப்பு

நாங்கள் விரும்பும் வாழ்க்கை உங்களுடையது அப்பு
நாங்கள் வாழ முடியாத வாழ்க்கை
உங்களுடையது அப்பு
நாங்கள் தொடவிரும்பும் சிகரம் நீங்கள் அப்பு
நாங்கள் தொடவே முடியாத சிகரம் நீங்கள்தானப்பு

ஆச்சியைவிட்டு
பிள்ளைகளைவிட்டு
எங்களை விட்டு, எல்லோரையும் விட்டு
எங்கே போய் விட்டீர்கள் அப்பு?

உங்களிடமிருந்த மிடுக்கை, அன்பை, கருணையை
ஆரும் அந்தரிக்கும்போது தரும் ஆதரிப்பை
தோள் கொடுத்தலை
துயர் துடைத்தலை, நியாயத்தை எடுத்துரைத்தலை
நீங்கள் உங்கள் பிள்ளையிடம் தந்து சென்றீர்கள்?
அதுபோதும் உங்களுக்கு.
எதை விரும்பினீர்களோ அது அதுவாகவே இருக்கிறது.

நான் கொண்ட உறவில்
நான் பெற்ற பேறுகளில்
அப்பு உங்கள் உறவு பெரிது
அது தொடருகிறது வழிவழியாய்... நீள நீள
ஆறுதலடிய முடியாதென்ற போதும்.



# அப்பு

புதுவை இரத்தினதுரை

அப்பு!
வார்த்தையொன்றும் கிட்டலையே
உங்களை வடிவமைக்க.
கவிதையொன்றுக்காக அமர்ந்தால்
கண்ணீர் வருகுதன்றி
கவிதை வரக் காணோமே.
எத்தனை கவிதைகள் செதுக்கினேன்.
எத்தனை பாடல்களுக்குப் பிரம்மனானேன்.
ஏனப்பு உங்களை மட்டும்
உருவகிக்க முடியவில்லை என்னால்?
அப்பு!
தமிழை என்வாய் தீத்திய தந்தையே
உங்கள் நினைவிற்கு
சொற்களால் ஒரு மாளிகை சமைக்க முயன்று
தோற்றுப் போனேன் இன்று.
பெற்ற கடன்தீர்க்காப் பாவியாய்
கொள்ளிசொருகிக் கொளுத்தினேன்.



எஞ்சிய சாம்பலையாவது எடுத்துவைத்தேனா?
வில்லூன்றிக் கடலிலல்லவா கரைத்து
தலை முழுகி வந்தேன்.
பெற்ற கடனுக்குப் போதாதையா
இந்த எரிப்பும், கரைப்பும்.
இந்த நாயையும் நிமிர்த்திய நாயகனே!
அந்தரித்துப் போவேன் இனி.
உங்கள் அந்திமத்திலாவது அருகிருந்து தாங்கும்
வரம் நல்காது
தூரத்தித் துடிக்க வைத்தது சூழ்நிலை.
சதி செய்ததையா விதி.
வெளியே சிரித்து விளங்குகிறேனே தவிர
சின்னவயதின் நினைவுகள் தீ மூட்ட
உள்ளே எரிகிறேன்.
என்னால் என்ன செய்ய இயலும் இதைத்தவிர?
வல்லமையற்ற பிள்ளையாய்
பெற்றாய்,
வளர்த்தாய்
எந்தப் பலனையும் என்னிடம் எதிர்பாராமல்.
கொள்ளிக்கு மட்டுமே நீயெனக் குறித்து
ஆவி கலங்கிய கடைசி நொடியிலும்
இந்தப் பாவியைப் பார்க்காமல்
போனாய் புண்ணியனே.
வேறெந்தத் தந்தைக்கும்
என்னைப் போல் பிள்ளையொன்று
இனிப் பிறக்காதிருக்கக் கடவது.
ஆச்சி தனித்தாள்,
அக்கா அந்தரித்தாள்,
வந்துமக்கு வாய்க்கரிசியாவது போடும்
வரமற்றுப் போனாள் தங்கை.
தம்பிதான் பாவம்
அடிக்கடி வந்து ஆதரித்தான்.
ஆயினுமென்ன
பொற்சுண்ணமிடிக்கும் பேறிழந்து போனானே.
கழிந்த காலத்தைக் கரையொதுக்கிவிட்டு

நடக்கிறது காலநதி.
நிகழ்காலத்தையும் நாளை எறிந்துவிட்டு
நடக்கும் நாளெனும் நதி.
காளி!
ஊழிக் கூத்தின் முதல்வி!
வந்தாயடி நேற்றெம் வாசல்.
வந்து திரும்பும்போது
அப்புவைத் திருடிச் சென்றாய்.
சிம்மவாகினி!
உன் பாத அரவிந்த நிழலில்
அப்புக்கோர் ஆசனமருள்க
இனியாவது அவர் கொஞ்சம் இளைப்பாறட்டும்.
18.01.2004 ஞாயிற்றுக்கிழமை
அன்றுதான் எம்மிலிருந்த பலம்,
இறுமாப்பு,
தன்னம்பிக்கை
எல்லாம் கைதவறிப்போனது.
எம்மீதான அன்பு,
கரிசனை,
பற்றிப் படர்ந்திருந்த உறவு
எல்லாம் இல்லையென்றாச்சு.
எண்பத்தியெட்டு வருடமாய்
பெரிய உறவுவட்டமாய் விரிந்தவெளி
கணமொன்றில் சுருங்கி,
ஒரு புள்ளியாகி,
பிணமென்று பேர்சூடி
பின் காணாமலே போனது.
வீட்டு முற்றத்திலும்,
திண்ணையிலும்,
காளி கோயில் கருவறையிலும்,
சொந்தங்கள் நெஞ்சிலும்
பரவிய சந்தனவாசம்
இல்லையென்றானது இப்போ.
வந்து சுகம் கேட்கும் வசந்தமில்லாது
புழுங்கிக் கிடக்கிறது முற்றத்து வேம்பு.



ஆச்சியென அழைத்தபடி
வந்தமரும் அப்பு இல்லாமல்
காளியம்மன் கருவறை இருண்டது.
காண்டாமணி மௌனத்தில் உறைந்தது.
நிமிர்வுக்குக் கண்ணெதிரேயிருந்த சாட்சியை
பூவரசங்கட்டையில் வைத்தெரித்து
பதினாறு நாட்கள் இன்றுடன்.
வஞ்சமில்லா நெஞ்சொன்றின் எச்சத்தைக்கூட
வில்லூன்றி வற்றுக்கடல் வாங்கிவிட
வெறுங்கையர் ஆனோம் நாம்.
அப்பு
வெளியே தெரியாதிருந்து போன
அழியா அழகு.
பணிந்தறியாச் செருக்கின் நிமிர்வே
எமக்கவர் அருளிய கொடை.
எட்டறிவு அதிகம் இல்லையெனில்
அதுவொரு குற்றம் அல்லவென
அப்புதான் அயலுக்குத் தீர்ப்பெழுதினார்.
உண்மை மனிதன் உரத்துப் பேசுவான்.
காதுகிழியக் கத்துவானென
சத்தியத்துக்குச் சாட்சி சொன்னவர் அப்புதான்.
சுறுசுறுப்புக்கும்,
சோரா உழைப்புக்கும்,
பஞ்சியறியா நடை பயணத்துக்கும்
ஒரேயொரு உதாரணம் இருந்தது.
அதுவும் இல்லையென்றானது நேற்றுடன்.
அப்பு எல்லோர் மீதும் கோபமெறிவார்
உள்ளூறும் அன்புக்கசிவில் நனைந்தபடி.
மற்றெந்தத் தந்தைக்கும் மேலானவரல்ல
எம் தந்தை.
எனினும்
வேறெந்தத் தந்தைக்கும் கீழானவருமல்ல
எங்கள் அப்பு.
அப்பு சிரிப்பது அத்தி பூப்பதுபோல
எப்போதாவது இருந்துவிட்டு இவ்வதிசயம் நிகழும்.

மெல்லக் கதைப்பதென்பதை அவர் வாயறியாது.
உரத்து,
மிகவுரத்து
ஓங்காரமாய் ஒலிக்கும் குரல்.
அருந்தலாய்,
மிக அருந்தலாய்
நெகிழக் கூடியதாய் ஏதேனும் நிகழ்த்துவார்.
கால்பட்டுலவிய முற்றத்திலிருந்த
சுவடுகளையும் நேற்றழித்தாயிற்று.
காற்றில் கலகலத்த பேச்சரவம்
இன்றில்லை, இனியுமில்லையெனும்
உண்மை அறைகிறது முகத்தில்.
மரத்துக்காக வேர்கள் நீரருந்துவதே வழக்கம்.
இங்கு வேர்களுக்கு மரமே பால் கொடுத்தது
தன் அந்திமம் வரையும்.
ஏய்; பருத்தித்துறை வீதியே!
புத்தூரிருந்து கள்ளியங்காடு வரையும்
கொதித்துருகும் தார் பூசிய உன்முதுகேறி
வெற்றுக் காலுடன் இனியெவரின்
வீதியுலா இருக்கும்?
அப்புவின் கால்படும் பாக்கியமிழந்து
தவிப்பாய் கிடந்து எங்களைப் போல.
காளியம்மன் கோயிற் கருவறையே!
எவருமில்லை உனக்கினி ஒளிதர.
ஒற்றை மனிதனாய் வெளிச்சம் நல்கிய அப்புவை
எடுத்துச் சென்றாய்.
இனி இருட்டில் கிடவடி கிழடி.
என் மனைவி இரவும் அழுதாள்
மாமனுக்காக அல்ல
மனிதனுக்காக.
நெஞ்சில் கல்மிஷமற்றவர் அப்புவென
நெடுகவும் சொல்வாள்.
உண்மைதான் அப்பு.
ஒப்பனை ஏதுமற்ற உண்மை முகத்துடன்
பொய்யான போர்வையேதும் போர்க்காமல்



இப்படி இருந்துபோக எப்படி முடிந்தது உங்களால்?
தேவேந்திரன் உலாவரும் தேரின் சக்கரம்
பழுதுற்றுளதாம்.
வாயுதேவனின் வாகனமும்,
வர்ணபகவானின் ஆசனமும்
சிதிலமுற்றுளதாம்.
புதிய ரதமொன்றில் உலாவர
அக்கினிக் கடவுளுக்கு ஆசையாம்.
எல்லோரும் சேர்ந்து அப்புவை எடுத்துவிட்டனர்.
"அண்ணனைக் கூட்டிவாருங்கள்"என
'ஆசையய்யா'தான் சொல்லியிருப்பார்.
ஐம்பது தேர்களைச் செய்த அவருக்கு
பக்கத்தில் நீங்களில்லாவிட்டால் பத்தியப்படாதே.
தனக்குக் கொள்ளியிட்டவரை
தம்பி அழைத்தார்.
உங்களுக்குக் கொள்ளியிட்ட கையை
என்ன செய்யும் உத்தேசம்?
அப்பு!
நீங்கள் இல்லாமலும் மழைபொழியும்
எங்கள் முற்றத்தில்தான் நிலம் குளிராது.
நீங்கள் இல்லாமலும் பூக்கள் மலரும்
எங்கள் முற்றத்தில்தான் வாசம் பரவாது.
அடுத்த பிறப்பென்று ஒன்றிருந்தால்
அப்போதும் ஆச்சியே உங்கள் மனைவியாய்,
நாங்களே பிள்ளைகளாய்,
மருகர், பேரர், மைத்துனர்கள் எல்லோரும்
இவர்களாகவே இருக்கட்டும்.
சென்று வருக.
திரும்பி வராவிட்டாலும்
நன்றியென்ற ஓர் உணர்வை
நாம் சுமந்து நிற்கின்றோம்.
சென்று வருக தேவே.
□□

# சாவு பற்றிய சில விசாரணைகள்

-புதுவை இரத்தினதுரை

காலமெழுதிய கவிஞனின்
சுமையற்ற வாழ்வும், பயமற்ற சாவும்

நோயுற்றுச் சிதைக்கப்பட்டோ,
எதிரிகளால் துளைக்கப்பட்டோ,
சாவெனக்கு இல்லையெனில்
முதுமையிலும் நான் முளைப்பேன்.
என் கவிதைகளே
எனக்கு வாலிபத்தின் வலிமை தரும்.
கால்கள் நடக்கவும்,
கைகள் வீசவும்,
குனிந்து ஒருபிடி மண்ணள்ளி நிமிரவும்
பலமிருந்தால் போதும்
என்னால் இறக்கைகட்டிப் பறக்க முடியும்.
சாவை எதிர்கொள்ளும் சக்தியுடன்
முதுமையிலும் வாழ்வைத் தரிசிப்பேன்.
பூக்களுடன் வேர்களாகவும்,
வேர்களுடன் பூக்களாகவும்,
விளங்க முடியும்.



அன்றும் என் கவிதைகளால்
புதிது புதிதாகப் பிறந்தெழுவேன்.
மானுட வதைக்கெதிராக
அன்றும் போராடும் அணியினரின்
அருகாய் விரிவேன்.
எனக்கு முதுமையில்லை,
தள்ளாமையில்லை,
என் கவிதைளால் எனக்குச் சாவுமில்லை.
வாழ்வின் இறுதிவரிகளை
நானெழுதும் போது
என்னருகில் எவரும் வேண்டாம்.
சின்னக் குத்துவிளக்கின் ஒளியில்
முகமிருந்தால் போதும்.
வந்தபோதும்,
வறுமையுற்று இருந்த போதும்
எந்தவிதமாகத் தனித்திருந்தேனோ
சாவுக்கு என்னை இரையாக்கும் போதும்
தனித்திருக்கவே விரும்புகிறேன்.
காலன் நடந்து வரும் காலடியரவம்
என் காதருகே கேட்கவும்
கலங்கேன் நான்.
அட! வாடா என அழைத்தவனை
வரவேற்பேன்.
நீட்டிப் படுக்க ஒரு பாய்,
தாகமெடுத்தால் குடிக்கத் தண்ணீர்,
பாடியபடியே சாக என் பாடலொன்று
போதுமெனக்கு.
போய்ச்சேர்ந்து விடுவேன்.
உடல் விறைத்து
பிணமென்றான பின்பும்
யாரும் கலங்கக் கூடாது.
வீட்டிலென் சவமிருக்கும்வரை
என் பாடல்களைப் பாடி
கவிதைகளை உரத்து வாசித்து
எல்லோரும் இன்புற்றிருக்கக் கடவது.

வந்தேன்
இருந்தேன்
சென்றேனென இல்லாமல்
என்னாலும் இயன்றளவு
செய்தே திரும்பினேன் என
போவேன்
எனக்கிது போதும்.

□□
சுட்டும்விழி
15.08.2003

## காலனே!

காலனே!
கயிறு என்மேலெறிய
கணக்கெடுக்கின்றாயா நாட்களை?
விரைவில் முடியாதென் கணக்கு.
சாக்குறிக்கும் ஜாதகமே பொய்யென
உணர்த்துவேன் உனக்கு.
மரணபயமில்லை எனக்கு.
இறுதி நாளைச் சொல்லவரும்
உன் தூதுவரைக் கூட
முகம் மலர்த்தி வரவேற்பேன்.
மேதியூர்தி ஏறிவரும் உன்னையும்
பாயருகே அமர்த்தி
பத்துவருடங்கள் கழித்துவாவெனச் செப்பும்
பலமெனக்குண்டு.
என் "அப்பு" எனக்களித்த வரமிது.
சாவு ஒருநாள் என்னைத் தழுவும்



என் ஒப்புதலுடன்.
போதும் என் ஜீவிதமெனும் நிறைவுடன்
நானாக உன்னைக் கூவியழைத்து
கூட்டிப்போ என்பேன்.
அதுவரை உனக்கு
என் முகவரி எதற்கு?
காலா!
சென்று வேறெவனும்
இழிச்ச வாயன் இருப்பான்
எடுத்துச் செல்.
என்னைத் தான் வேண்டும் எனில்
நானாக உன்னை அழைப்பேன்
அப்போது வா தோழா.

□□
24.07.1998

## இறப்பெனப்படுவது பிறப்பே

இந்த இரவைப் போலவே
நேற்றுச் சாவடைந்த இரவும்
இருந்தது இறுதி மூச்சை எறியும்வரை.
மெல்லிய பனிபூசிக்கொண்டு
முதலிரவுக்குப் பரபரக்கும் மணப்பெண்போல
சந்தோஷத்தில் தலைவாரிக்கொண்டது.
இருப்புக்கொள்ளாமல்
நிலவைப் பொட்டிட்டு
முகிலைப் போர்த்திக்கொண்டு
சில்வண்டின் பாட்டுடன் இணைந்து
மோகனம் வழிந்தொழுகப் பாடிற்று

மெல்லியதாய்.
நாணம் மீதூர இடைக்கிடை சிரித்து
தன்னைச் சரிபார்த்தும் கொண்டது.
தனித்திருக்கும் பீதியற்று
முளைத்திருக்கும் காவலரண்களையிட்டும்,
கொல்லாயுதமேந்தி
உலாப்போவோரையிட்டும்
எந்த அச்சமுமின்றி
எதையும் எடுத்தெறியும் பாவனையில்
பாடிக்கொண்டிருந்தது சாமம்வரை.
அதிகாலை சந்தியாகாலமிருக்கும்
அதுக்கு மூச்சுத் திணறியது.
முகம் வெளிறி
ஏதோ முனகிற்று.
அவ்வளவுதான்
சடலமெடுத்தெரிக்கும் சிரமமும் தராது
காணாமற் போயிருந்தது காலையில்.
இந்தோ இன்றைய இரவிருந்தும் பாடுகிறது
எத்தனை புளகிதமாய்.
ஐயோ பாவம்.

□□

## இந்தளவேதான் நான்

இன்றாகவும் நாளையாகவும் இருக்கலாம்.
இல்லையெனில்
இன்னும் சில நாட்களின் பின்னராவது
இது நடக்கும்.
அன்று மூச்சைத் துறந்து முடங்கிப் போவேன்.



கட்டிலில் வளர்த்திக் கதறி
சுற்றம் அழும்.
தெரிந்த சிலர் கூடியிருந்து
கற்பனைக்குத் தக்கபடி கதைப்பர்.
கோயிற் கொலு துறந்து வந்து
என்சீமாட்டி சூலில் உருவெடுத்த 'சூட்டி' மகள்
துடிப்பாள்.
அடைவைப்பின் கடைக்குஞ்சு
அப்பா எனக் கத்தும்.
கொள்ளிக்கு நான் வளர்க்கும் பிள்ளை
ஊனுருகி ஒழுக அழுதபடி
என் சிதைக்கு தீயிடுவான்.
அந்தரித்துப் போவாள் மனைவி.
அவள் பாவம்
எந்த நிழலும் இளைப்பாற இருக்காது.
அஞ்சாறு நாள்வரைக்கும்
ஆரேனும் பேசுவர்.
பின்னர் பெஞ்சாதிவாய்மட்டும் பேசும்.
அதுவும் கொஞ்சநாள் வரையும்தான்
அதன்பிறகு என்ன நடக்கும்?
எதுவும் நடக்காது.
கால மழையிற் கரைந்து
என் நாமம் அழிந்து
மெல்ல, மெல்ல இல்லாது போவேன்.
மாரிவரும்
பொன்னாவரசும், என்வீட்டுப் பூவரசும்
பூத்துச் சொரியும்.
கோடை வரும்
எல்லாம் ஆடையிழந்து அலங்கோலமாகும்.
முதிர்ந்தவை உதிரும்.
புதிய தளிர்கள் பிறந்து பேசும். சிரிக்கும்.
என்னையெவரும் நினைவிருத்த மாட்டார்கள்.
வந்ததுக்கும்,
இருந்ததுக்கும்,

போனதுக்கும் கூட
எந்தச் சுவடுமின்றி 'இவன் வாழ்வு' முடியும்.
எனக்குத் தெரியும், இந்தளவேதான் நான்.

□□
வெளிச்சம்
ஐப்பசி - 1995

## எடுத்து வருக!

ஓரிரவில்
வெறுங் கையனாய் வெளியேறி
தெருவில் இறங்கினேன்.
ஏதும் எடுக்கிலேன்.
சூரியதேவே;
என் ஊர்மேல் உலவில்
விட்டுப் பிரிந்த என் வீட்டு முற்றத்தில்
கட்டிய தலைவாசற் கூரைக்கிடுகின் கீழ்
எடுக்கத் தவறிய திறப்பிருக்கும்
கொண்டு வருக.
அது என் பூட்டனின் பெட்டகச்சாவி.
பரம்பரைக்குரிய காணி உறுதிகள்,
காளியம்மனின் மேனி நகைகள்,
கலை வந்தாடிய போதில்
என் பேத்தியெடுத்துப் பேய்விரட்டிய
வெள்ளிச் சிலம்பு,



தண்டையும் வாளும்,
செஞ்சந்தனக் கைப்பிரம்பு,
அந்திம காலத்தில்
ஆத்தை ஏற்றிய பித்தளை விளக்கு,
மந்திரமெழுதிய ஏட்டுச் சுவடிகள்,
யந்திரத் தகடும், நாகபடமும்
செப்புக் காசுகள் சிலவும்...
வேண்டும் இவையெனக்கு.
இது உன் பூமியெனவும்
இவையுன் வேர்களெனவும்
நாளையென் பேரனுக்கு
ஒப்புக் கொடுத்தென் உயிர்ப்பிரிதல் வேண்டும்.
சூரியதேவே! இவை கொணர்க.
என் வேர்கள் எனக்கு வேண்டும்.
நாளை நான் போவேனெனினும்
இன்றெனக்கு வேண்டும்
எடுத்து வருக.

□□
வெளிச்சம்
மாசி - 1996

# பஞ்சபுராணம்

## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிர
அண்ணாமலை தொழுவார்வினை வாழுவாவண்ணம் அறுமே.

## திருவாசகம்

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறள் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்திறள் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்யாம் அல்லற்படை வாராமே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள் ளேபுகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.



## திருமந்திரம்

சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

# திருப்பள்ளியெழுச்சி

போற்றி என் வாழ்முத லாகிய பெருமாளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகைகொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்ந்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்

ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே.
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே.
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்தின் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே.
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளிஎழுந்தரு ளாயே.



அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறுஅது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தோறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய் வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயிரானாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே.

# திருப்பொற் சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகிர் அன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந்து எம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்



அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணிமின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறைஉரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் இந்திர னோடுஅமரர்
நறுமுறு தேவர்க ணங்கஎெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமே லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டம் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகுரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்



பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையரவு அல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்இடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.
ஆவகை நாமும்வந்து அன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடைபாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இன்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ்சு உண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுஉரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின்று ஆடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய் இன்பம் ஆயினார்க்கு
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

□□

## அப்புவை இழந்து தவித்தபோது கண்ணீர் துடைத்த கைகளுக்கு

எண்பத்தெட்டு அகவைவரை எம்மோடிருந்து சுற்றத்தையும் அயலையும் அரசாண்ட சுடர்விளக்கு 'அப்பு' 18.01.2004 ஞாயிறன்று நிரந்தர விடை கொண்டு நீங்கிய போது நேரில் வந்தும், தொலைபேசி, தந்தி, தபால், மின்னஞ்சல் மூலமாகவும் ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் அன்பு.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வழியாக அப்புவின் நித்திய உறக்கத்தை உலகெங்கும் சொல்லிய ஊடகங்கள் அனைத்திற்கும் நன்றி.


மலர்வளையங்கள் சாத்தியும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், மரணச் சடங்கில் நேரடியாகக் கலந்தும் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அயலவர்கள் அனைவருக்கும், இம் மலருக்கான அப்புவின் உயிரோவியத்தை வரைந்தளித்த ஓவியர் ஆசை இராசையாவுக்கும் எம் நன்றி.

அன்புடன்

திருமதி வரதலிங்கம் பாக்கியம் (மனைவி)

| பிள்ளைகள் | மருமக்கள் |
|---|---|
| திருமதி ப.இராசலட்சுமி | கா.செ.பத்மநாதன் (J.P) |
| வ.இரத்தினதுரை | திருமதி இ.ஸ்ரீரஞ்சனி |
| திருமதி கு.சரோஜினிதேவி | சொ.குமாரலிங்கம் |
| வ.தர்மகுலசிங்கம் | திருமதி த.வசந்தகுமாரி |







புவனங்கள் ஆளும் பெருமாட்டி
எம் தலைவன்
கவனத்தை ஈர்த்துக் கைகொடுத்த சீமாட்டி
வந்தாரெம் அப்பு
வாரி ஒரு முத்தம்
தந்தேன் எனச் சொல்லித் தாங்கு
அதுபோதும்.

வாதம்

கால்பட்டுலவிய முற்றத்தில்
சுவடுகளையும் நேற்றழித்தாயிற்று.
காற்றில் கலகலத்த பேச்சரவம்
இன்றில்லை: இனியுமில்லையெனும்
உண்மை அறைகிறது முகத்தில்.



BOASCO ARTONE PRINTERS, NALLUR.
e-mail: boasco_boss@hotmail.com